5. அறிவிப்புகள்.

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987-88 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது :

"In pursuance of Article 206, Clause 2, read with Article 203, Clause 3 of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1987-88."

6. முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88—வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"1987-88 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24—3—1987 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக் கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1987-88 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக மொத்தமாக ரூபாய் 1,100 கோடியே 15 இலட்சத்து 95 ஆயிரத்துக்கு மேற்படாத தொகை அரசுக்கு முன் பணமாக வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற்றன.